**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,**

**TENKASI.**

**Date : 03.02.2026**

**OS No. : 315/2021**
**Dw : 3**

**Name : திரு.முகைதீன் பிச்சை**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றிற்கு விவரம் சொன்னது யார் என்றால் 1ம் பிரதிவாதி அனிபா ஆவார். 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி செங்கோட்டை பார்டரில் பிலால் ஓட்டல் நடத்திவருகிறார். நான் கடந்த 2006ம் வருடத்திலிருந்து 2021 வரை அதே ஓட்டலில் அவருடன் வேலை பார்த்தேன். நான் அங்கு வேலை பார்த்ததற்கான எந்த ஆதரவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யார் யார் மீது என்ன வகைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஷாஜகான் என்பவர் 1ம் பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த பிரச்சனை குறித்து 1 மாதத்திற்கு முன்னர் 1ம் பிரதிவாதி என்னை அழைத்து சொன்னார். ஷாஜகான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் கடையநல்லூர் ஷாஜகான் என்பவரிடம் வாரச்சீட்டு, மாதச்சீட்டு போட்டிருந்தேன். நான் எந்த காலக்கட்டத்தில் எவ்வளவு ரூபாய் சீட்டு போட்டுவந்தேன் என்பதை என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எந்த வகையில் சேர்ந்திருந்தேன, அதன் தவணை எவ்வளவு

என்ற விவரம் எதுவும் என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். பிலால் ஓட்டலில் பணிபுரிந்த வேறு சிலரும் ஷாஜகானிடம் சீட்டு போட்டதாக என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்கள் யார் யார் என என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் அவர்கள் வேலையை விட்டு சென்றுவிட்டார்கள். கடையநல்லூர் ஷாஜகானின் வயது, அவரது அப்பா பெயர் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியும், பிரதிவாதியும் சொல்லி எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியவந்ததா அல்லது இந்த வழக்கு குறித்து நான் கேள்விப்பட்டேனா என்றால் 1ம் பிரதிவாதி அனிபா சொல்லித்தான் எனக்கு தெரியும்.

1ம் பிரதிவாதி எனது உறவினர் கிடையாது. வாதி ஷாஜகானை யார் என்றே எனக்கு தெரியாது என்றும், நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் நான் அவரிடம் சீட்டு போட்டது கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. ஷாஜகானுக்கு என்னை யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான எனது ஓட்டல் உரிமையாளர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஷாஜகான் எந்த காலத்திலும் சீட்டு பிரிக்கும் தொழில் செய்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**( 2. 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi